விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194A, தட்டாரத் தெரு, கொழும்பு.
Phone: 3411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆண்டு ஐப்பசி மீ 25உ செவ்வாய்க்கிழமை — Colombo, November, 11, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 27 | இதழ் 161

சக்கரவர்த்திராஜகோபாலாச்சாரியார் கவர்னர்ஜெனரலானார்

சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகிய முதல் தமிழ்மகனார்

ஜூனாகத்சமஸ்தான நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது

இன்றுஸ்ரீநகருக்குநேருஜிபயணம்

பிரிட்டன்-பாகிஸ்தான் பிரிட்டிஷ் ராணுவ சேவை ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 10

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தற்காலிகமாக இந்தியாவின் கவர்னர் ஜெனரலானார். இன்று காலை அவர் பதவியை ஏற்றுக்கொண்டார். இரண்டுவார காலம் அவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருப்பார்.

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டன் லண்டனில் நடைபெறும் எலிசபெத் இளவரசி கலியாணத்திற்கு விஜயம் செய்யும் பொருட்டு இன்று தனது மனைவியார் லேடி மவுண்ட்பேட்டனுடனும் மகள் பாமெலாவுடனும் தனது சொந்த ஆகாய விமானத்தில் இங்கிலாந்துக்குப் பயணமானார். அவர் நவம்பர் 20-ம் தேதி நடைபெறும் இளவரசி விவாகத்திற்கு விஜயம் செய்து விட்டு 22-ம் தேதி இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு 24-ம் தேதி டில்லிக்குத் திரும்பி வந்து சேருவார்.

ஜூனாகத் இந்தியாவுடன் சேர்ந்தது

புதுடில்லி, நவ. 9

இந்திய சர்க்கார் கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்:-

ஜூனாகத் சமஸ்தான பிரதம மந்திரி சர் ஷாநவாஸ் புட்டோவின் வேண்டுகோளின்படி, இந்திய சர்க்கார் ஜூனாகத் சமஸ்தானத்தின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. இன்றிரவு இந்திய சர்க்கார் துருப்புகள் சமஸ்தானத்திற்குள் பிரவேசித்தன. சமஸ்தான எல்லையிலே அத்துருப்புகளைசமஸ்தானத்தின் உயர்தர அதிகாரிகள் வரவேற்றனர். இந்திய துருப்புகள் ஜூனாகத்தின் முக்கிய துறைமுகமான வெரவாலையும் ஜூனாகத் ராணுவத் தலைமைக் காரியாலயத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டன.

பாகிஸ்தான் பிரதமருக்கு இந்தியா பிரதமர் தந்தி

இன்றிரவு இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகானுக்கு கீழ்கண்ட தந்திச் செய்தியை அனுப்பினார்:-

ஜூனாகத் சமஸ்தான நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்று நடத்த தீர்மானித்திருக்கின்றன. ஜூனாகத் சமஸ்தான திவானின் வேண்டுகோளின்படி இந்திய துருப்புகள் சமஸ்தானத்திற்குள் பிரவேசித்தன. பாகிஸ்தானில் ஜூனாகத் சமஸ்தானம் சேர்ந்தது சம்பந்தமாக இருக்கவும் தகராறு முடிவதற்குள் சமஸ்தான நிர்வாகம் குலைந்து போகாமல் அதைப் பாதுகாக்கவே அந் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள இந்திய சர்க்கார் சம்மதித்தனர்.

பண்டித நேரு ஜனாப் லியாகத் அலிகானுக்கு கீழ்கண்ட மற்றுமோர் தந்திச் செய்தியை அனுப்பியிருக்கிறார்:- இன்று இந்திய துருப்புகள் ஜூனாகத் சமஸ்தானத்திற்குள் பிரவேசித்தன. ஆனால் இந்திய சர்க்கார் ஜூனாகத் சமஸ்தான நிர்வாகத்தை தற்காலிகமாக ஏற்று நடத்தவே இசைந்திருக்கின்றன. பொது ஜனவாக்கெடுப்பு மூலமாகவே இறுதியான முடிவு செய்யப்பட வேண்டும். ஆதலால் இப்பிரச்னைபற்றி உங்கள் சர்க்கார் பிரதிநிதிகளுடன் கூடிய சீக்கிரம் சமரசப் பேச்சு நடத்த ஆவலுடனிருக்கிறோம்.

காஷ்மீர நிலைமை

புதுடில்லி, நவ. 9

மேற்றுபரமூலா நகரைக்கைப்பற்றிய இந்திய துருப்புகள்பரமூலாவிலிருந்து செல்லும் முக்கிய ரஸதாவழியாக முன்னேறி அதற்கு தென் மேற்கே 25-வது மைலிலுள்ள ஊரி என்னுமிடத்தைக் கைப்பற்றின என்று இந்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி காரியாலய அறிக்கை தெரிவிக்கிறது. முன்னேறிச் செல்லும் இந்திய படைகளுக்கு ஆதரவாக இந்திய ராணுவ விமானங்களும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன

ஸ்ரீநகர் பள்ளத்தாக்கில் ஆங்காங்கு மறைந்து கொண்டிருக்கும் எதிரிகளைக் கண்டு பிடிக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது. அங்கு சில ஆயுதங்களும், ரேடியோக்களும் மருந்து சாமான்களுள்ள லொறியும் கைப்பற்றப்பட்டன.

நேரு விஜயம்

பண்டித ஜவஹர்லால் நேரு செவ்வாய்க்கிழமையன்று காவுமீரத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்கும் மாரிகாலத் தலைநகரான ஜம்முவுக்கும் விமானத்தில் பறந்து செல்வார்.

முஸ்லிம் லீக்

இந்திய சர்க்கார் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் அசாத் கூட்டிய தேசிய முஸ்லிம்களின் மகாநாடு டில்லியில் நடைபெறுகிறது. அதற்கு விஜயம் செய்துள்ள ஜனாப் முகம்மது யூசுப் பேசியபோது, இந்திய டொமினியனிலிருக்கும் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று தெரிவித்தார். இச்செய்தி டில்லி ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் வகுப்பு வித்தியாசத்தையொழித்து இந்தியா தேசத்துப் பிரஜைகளுடன் கலந்து வாழ வேண்டுமென்று ஜனாப் யூசுப் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ராணுவ சேவை ஒப்பந்தம்

லண்டன், நவ. 9

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொதுவாக இருந்து வரும் கூட்டு ராணுவமான பிரிட்டிஷ் ராணுவம் கூடிய சீக்கிரம் கலைக்கப்படும். இந்தியா பாகிஸ்தான் கூட்டு ராணுவ கவுன்ஸில் உத்தரவின் மீது கூட்டு ராணுவத் தளபதி 1947 அக்டோபர் மாதம் முதல் தேதியன்று கூட்டு ராணுவத்திலும் இந்தியா பாகிஸ்தான் ராணுவங்களிலும் சேவை செய்யும் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கு சேவையிலிருந்து விலக்கப்படுவதாக மூன்று மாத முன்னறிவிப்பு செய்தார். இதன்படி இந்தியா பாகிஸ்தானிலுள்ள எல்லா பிரிட்டிஷ் ராணுவத்தினரின் உத்தியோக காலம் டிசம்பர் 31-ம் தேதியுடன் முடிவடையும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் டிசம்பர் 31-ம் தேதிக்குப் பின் பிரிட்டிஷ் ராணுவத்தின் சேவை தேவையாக இருந்தால் அது சம்பந்தமாக இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய சர்க்காருக்கும் பாகிஸ்தான் சர்க்காருக்கும் அறிவித்திருந்தார்கள். பிரிட்டிஷ் ராணுவத்தினர் வேலைக்கமர்த்துவதாக இருந்தால் அவர்கள் சம்ப

(4-ம் பக்கம் பார்க்க)

கைதியைப் பிடித்து கொடுப்பவருக்கு

ரூபாய் 1000 பரிசு

கொழும்பு, நவ. 10

கடந்த செப்டம்பர் 12-ம் தேதி வெளிக்கடை சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய டொன் ஜேமிஸ விஜயரத்தனு ஜெயசுந்தரா என்பவர் சம்பந்தமான திகவலைக் கொடுப்பவர்களுக்கு அல்லது அவரைக் கைது செய்ய தகவல் கொடுப்பவருக்கு ரூ. 1000 பரிசளிக்கப்படுமென போலிஸ இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

களவாடப்பட்ட மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டன

கொழும்பு, நவ. 10

நுகயகொடையைச் சேர்ந்த ஒரு மீன் வர்த்தகர் தமது கடையில் இருந்த மீன்கள் இரண்டு காணப்படவில்லையெனமிரிதான போலிசுக்கு தகவல் கொடுத்ததன் பேரில் போலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். கங்கொடவில மார்க்கெட்டில் இரண்டு மீன்கள் வைத்திருந்த ஒருவரை போலிஸார் இது சம்பந்தமாக கைது செய்ததுடன் அவரிடமிருந்த இரு மீன்களையும் போலிஸார் எடுத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

தந்தி-டெலிபோனுக்கு சாவுமணி

கேட்கவும் பார்க்கவும் அமெரிக்காவில் புதிய சாதனம்

நியூயார்க், நவ 10

டெலிபோன் தந்தி கம்பங்கள் எல்லாம் அடுப்பெரிக்க விறகாக விடுக்கப்பட்டு மைக்ரோ அலைகள் மூலம் செய்தி பரப்பும் நிலையங்கள் நாடெங்கும் தோன்றுங காலம் தூரத்தில் இல்லை, இந்த அலைகள் மூலம் ரேடியோ ஒலிபரப்பு டெலிபோன் செய்திகள். தந்தி சமாச்சாரங்கள், டெலிவிஷன் (தூரத்தில் நடப்பதைஇருந்த இடத்திலிருந்தே பார்ப்பது) முதலிய சாதனங்களை உபயோகிக்க வேண்டிய அவசியமே இருக்காது.

மட்டக்களப்பு, நவ 10

மட்டக்களப்பு கத்தோலிக்க கிளப் ஆதரவில் சென் மைக்கல் கல்லூரி மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் "தமிழ் இலக்கியத்திற்கு கத்தோலிக்கர் தொண்டு" என்னும் விஷயம் பற்றி சங. பிதா எக்ஸ். என். தனிநாயகம் பேசினார். திரு ஏ. எல். ஞானப்பிரகாசம் நன்றி யுரை கூறினார்.

தேச மொழிகளில் பேசலாம்

சென்ட் சபை நிகழ்ச்சி முறை

கொழும்பு, நவ. 10

சென்ட் சபை அங்கத்தினர்கள் சென்ட் சபைத் தலைவரின் அனுமதி பெற்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று பாஷைகளில் ஒன்றில் தமது பேச்சுகளை நிகழ்த்த முடியும் என்று தெரிகிறது.

"ஹன்ஸார்ட்" அரசாங்க சபை நிகழ்ச்சிப் பதிவுப் புஸ்தகத்தில் இப்பிரசங்கங்கள் எப்பாஷைகளில் நிகழ்த்தப் படுகின்றனவோ அவ்வப் பாஷைகளிலேயே பதிவுசெய்யப்படும்.

லைசென்ஸ இன்றி ஜவுளி விற்பனை

எதிரிக்கு ரூ 500 அபராதம்

கொழும்பு, நவ. 10

புறக்கோட்டை டயஸ் பிளேஸைச்சேர்ந்த டபிள்யூ. ஜேம்ஸ் என்பவர் புதிய சாரங்களை லைசென்ஸ் இல்லாது விற்க முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் கொழும்பு தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனு எதிரிக்கு ரூ 500 அபராதம் விதித்தார்.

ரூபாய் 30,000 வழிப்பறி முயற்சி

பணத்தைக்கட்டிப்பிடித்திருந்த பாலகனால் தோல்வியுற்றது

மூவர் கைது செய்யப்பட்டனர்

மஹாகமைக் கொள்ளை வழக்கிலும் ஐவர் கைது

நுவரெலியா, நவ. 10

தொழிலாளர் சம்பளம்30,000 ரூபாயுடன் காரில் சென்று கொண்டிருந்த உடப்புசெல்லாவை வல்டமார் குரூப்பின் புதிய தோட்ட மானேஜர் திரு. ஜே. டி. எல். லாபொன்டேய்ன் ஒரு கள்வர் கோஷ்டியினால் வழிமறித்துத் தாக்கப்பட்டார். ஆனால் காரில் இருந்த பத்துவயது பாலகன் புருஸ்காம்பெலின் புத்தி சாதுரியம், துணிகரமாக அவர்களை துமுயற்சி முற்றாக தோற்கடிக்கப்பட்டது.

காரில் மேற்படி இருவரையும் தவிர்த்து தோட்டப் பழைய மானேஜர் மனைவி ஸ்ரீமதி காம்பலும் இன்னோர் குழந்தையும் போய்க் கொண்டிருந்தனர். ஸ்ரீமதி காம்பலே காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். ஓடும் காரை நிறுத்துவதற்காக வீதியில் ஒரு குழி பறிக்கப்பட்டிருந்தது. அதில் கார் சிக்கியவுடன் சாரதி ஸ்ரீமதி காம்பெல் தாக்கப்பட்டார்.

திரு. லா பொன்டேய்ன் காரில் இருந்து வெளியே குதித்து கள்வர்களை எதிர்த்துப் போரிட்டதோடு பலமாகக் கூச்சலிட்டார்.

இதற்கிடையில் மூன் குறித்த பத்து வயதுப் பாலகன் பணப் பெட்டியை இறுகப் பிடித்து அதைவிட்டு விலாது ஓட்டிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

லா பொன்டேய்னின் ஓலத்தைக் கேட்டு தொழிலாளர் பலர் ஓடிவந்து கள்வர்களைப் பிடித்துக் கொண்டார்கள். இவர்களில் ஒருவன் பாணந்துறையைச் சேர்ந்தவன் என்றும் மற்ற இருவர்களும் வெளிமடைப் பகுதியைச் சேர்ந்த பர்ணகம வாசிகள் என்றும் அறியப்படுகிறது.

கள்வர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காளை நுவரெலியாக் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

புருஸ்காம்பெல் பழைய மானேஜர் எச். டி. காம்பெல் முன்குறித்த ஸ்ரீமதி காம்பெல் ஆகியோரின் பிள்ளை என்றும், திரு. காம்பெலின் ஸ்தானத்திற்கே திரு. பொன்டேய்ன் மானேஜராக வந்துள்ளார் என்றும் அறியப்படுகிறது.

குடகங்கைத் தோட்ட வழக்கில் ஐவர் கைது

மஹாகமையில் உள்ள குடகஸ்தைத் தோட்ட சூப்ரண்டனிடம் இருந்து தொழிலாளர் சம்பளம் ரூபா 12,000 சென்ற சனிக்கிழமை கொள்ளையிடப்பட்டது. இப்பணத்தின் ஒரு பகுதியான ரூபா 5372 இப்போ போலிசார் வசம் அகப்பட்டு விட்டது.

சமபவம் நிகழ்ந்த ஸ்தல வாசிகளான ஐவர் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சயாமில் திடீர் ராணுவப் புரட்சி

அரசாங்கத்தை தளபதி கங்க்ராம் கைப்பற்றினார்

யுத்த காலத்தில் ஜப்பானுடன் சேர்ந்து நேசதேசங்களுக்கு எதிராகப் போர்தொடுத்தவர்

பாங்காக், நவ. 9

இன்று காலை சயாம் தளபதி பிபூன்கங்க்ராம் தலைமையிலுள்ள ராணுவம் திடீர் புரட்சி செய்து சயாம் அரசாங்கத்தைக் கைப்பற்றினர்.

அரசாங்கம் கைப்பற்றப்பட்டதும் தளபதி கங்க்ராம் சயாம் மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தார்.

அனுபவம் வாய்ந்த நிர்வாகிகளை திரும்பவும் அரசாங்க நிர்வாகப் பதவிகளில் கொண்டு வந்து வைக்கும் பொருட்டே இப்புரட்சி நடைபெற்றதென்றும் அதனால் நாட்டின் தொல்லைகள் துரிதமாக நீக்கப்படும் என்றும் அதுவரை ஜனங்கள் அமைதியாக இருக்கும்படியும் வேண்டிக்கொண்டார்.

அவருடைய ராணுவம் பாதைகள் போக்குவரத்து செய்திகளின் போக்குவரத்து, பாங்காக்கிலுள்ள ஆகாய வசனி நிலையம் ஆகியவற்றை ஆதிக்கப்படுத்திக்கொண்டிருக்கிறது. முக்கியமான ஸ்தலங்கள் அந்த ராணுவத்தால் வளையப்பட்டு பாதுகாவல் செய்யப்பட்டு வருகின்றன. பாங்கார் நகரம் பொதுவாக அமைதியாகவே இருக்கிறது. தெருக்களில் ஆங்காங்கு ஜனங்கள் கூட்டங்கூட்டமாக நடமாடுகின்றனர்.

தளபதி கங்க்ராம் பிரதம தளபதி அதுலுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. பிரதம தளபதி பதவியிலிருந்து நீக்கப்படமாட்டார். இன்று பிற்பகல் தளபதி கங்க்ராம் எதிர்கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தார்.

அரசாங்கத்தைக் கைப்பற்றியதும் தளபதி கங்க்ராம் விடுத்துள்ள அறிக்கையில், அரசாங்க ஊழியர்கள் குழப்பமின்றி அமைதியாக அவரவர் வேலையை செய்துவர வேண்டுமென்றும் சயாமிலுள்ள சீனர்கள் தொல்லை கொடுக்காமல் அமைதியாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பலமான ராணுவ பந்தோபஸ்துடன் இன்று எல்லா அரசாங்க காரியாலயங்களிலும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை சயாம் அரசாங்கம் பிரதம மந்திரி லுவாங் தம்ராங் நவஸவத் என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவருடைய மந்திரி சபையில் பெரும்பாலும் ஜனக்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரே மந்திரிகளாக இருந்தார்கள். இந்தக் கட்சி யுத்த காலத்தில் ஜப்பான் ஆதிக்கத்தை எதிர்த்துக்கொண்டிருந்தது.

தளபதி பிபூல் கங்க்ராம் யுத்தகாலத்தில் ஜப்பான் ஆக்கிரமிப்பின்போது சயாம் பிரதம மந்திரியாக இருந்து நேசதேசங்களுக்கு விரோதமாக சயாம் யுத்தம் தொடுப்பதாகப் பிரகடனம் செய்தவர்.

ஜப்பான் தோல்வியுற்றபின் 1945-வது வருடத்தில் அவர் யுத்தக் குற்றவாளியாக கைது செய்யப்பட்டிருந்தார்.

1946-வது வருடம் மார்ச்சு மாதத்தில் அதாவது சயாம் பிரிட்டனுடன் புதுவருட சமாதான உடன்படிக்கை செய்த மூன்று மாதங்களுக்குப் பின், பாங்காக் ஹை கோர்ட் உத்தரவின்மீது அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இப்பொழுது பிரதம மந்திரி பதவியைபறிகொடுத்திலுவாங் நவஸவத் பல சயாம் மந்திரி சபைகளில் பிரதம மந்திரியாக இருந்தவர். அவரது கடைசி மந்திரி சபை இவ்வருடம் மே மாதம் அமைக்கப்பட்டது.

மந்திரி சபை திறமையில்லாமலும் ஊழல் நிறைந்ததாகவும இருக்கிறதென குற்றஞ்சாட்டப்பட்டபோது அவர் பழைய மந்திரிசபையைக் கலைத்து புதிய மந்திரி சபையை மே மாதத்தில் அமைத்தார். சென்ற மாதந்தான் இவர் யுத்த காலத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக சயாமிலுள்ள ஈயச் சுரங்கங்களின் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த முதலாளிகளுக்கு பன்னிரண்டரை லட்சம் பவுண் அளிப்பதாக அறிவித்திருந்தார். இது சம்பந்தம் சென்ற வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து சமரசப் பேச்சு நடைபெற்று வந்தது.

தளபதி கங்க்ராம் சயாமிலுள்ள ராணுவங்களனைத்துக்கும் பிரதமமான தளபதியாக ஆகிவிட்டார். அவருக்கு சயாமின் மாஜி பிரதம மந்திரிகளான அப்பைவாங, சௌனி மிரபோஜ ஆகிய இருவரின் ஆதரவு கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. புதிய மந்திரி சபை அமைப்பது சம்பந்தமாக அவர் அவர்களுடன் கலந்து பேசியிருக்கிறார். இதுவரை பிரதம தளபதியாக இருந்த அதுல் ரத்தப்புரட்சி ஏற்படாதவாறு அமைதியை நிலைநாட்டுவதில் கங்க்ராமுடன் ஒத்துழைக்க இணங்கியிருக்கிறார்.

கங்க்ராம் பிரதம மந்திரியாகமாட்டார். பிரதம தளபதியாகவே இருந்து வருவார்.

இதுவரை பிரதம மந்திரியாக இருந்துவந்த நவஸவத்தையும் ஜப்பான் ஆதிக்கத்தை எதிர்த்த தலைவரான பனம்யாங்கையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பனம்யாங்கும் சென்ற வருடம் மன்னர் ஆனந்தா சாகும்போது பிரதம மந்திரியாக இருந்தவர். மன்னர் இறந்தபோது பனம்யாங்கின் மாளிகை மீது துப்பாக்கிப்பிர

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 உ, கட்டாந் தெரு, கொழும்பு.
போன் 3411.

சாவதிக்கு ஒரு ரூபாவுக்கு 25உ
செவ்வாய்க்கிழமை

புதுக்கோட்டை மக்கள் வெற்றி

நிலைமை தெரியாத பேச்சு! (2)

பழந் தமிழ்த்தில் ஆற்றல் மிக்க தமிழரசு ஆண்டது. பல வேறு துறைமுகங்களிலிருந்து பிறநாட்டினருக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்தார்கள் தமிழ் மக்கள். இன்று இந்தியாவில் அப்படியில்லை. பிற நாடுகளுக்கு வாணிபங்கூடிய தமிழ் பம்பாயை எதிர் நோக்கி நிற்கிறார்கள். கடல் கடந்த பொருளைக் கொள்முதல் செய்ய கராச்சியைக் கண்ணிமை கொட்டாமல் பார்க்கிறார்கள். ஏதாவது தங்களுக்குக் கொடுப்பார்களா என்று எல்லாத்தரவை நோக்கை யேந்தி நிற்கிறார்கள். காரணம் என்ன? ஆங்கு வழுவந்த இனத்தார் தமிழரை தழுவைத்தனர் தமிழ் மொழிக்கு அபாயம் ஏற்படுகிறது. இந்நிலை மேலும் நேராமல் பாதுகாப்பதற்காக சென்னை மாகாணத் தமிழ் மக்கள் தமிழ் சுதந்திரக்கழகத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆள்வேண்டும் சமமுரசு; மாள்வேண்டும் மாற்றானின் சதிச் செயல் என்பது அவர்கள் நோக்கம். இதற்கான தமிழ் சுதந்திரக்கழகத்தின் தலைவர்தான் நாம் நேற்றுக் குறிப்பிட்டிருந்த தமிழ்ப் பேராசிரியர் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளை தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் வல்லுநர். ஆனால் அன்று அரசுக்கு அழகிய இலங்கையை தீபிட்டு அழித்ததுபோல் இங்குள்ள தமிழ் மக்களை மானமிழந்து வாழும்படி கேட்டுள்ளார் வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல் அவர், 'பாரதங்கள் தமிழாகிய நாமும், முஸ்லிம் பகைஞரும் சென்னை மாகாணத்தில் ஒற்றுமையாகவாழ்ந்து வருகிறோம்" என்றும் கூறியுள்ளார். சென்னிந்தியாவிலுள்ள முஸ்லிம் மக்கள் தமிழர்தான் என்பதை திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளை இன்னும் அறியாததையிட்டு வருந்துகிறோம். அவர்கள் பேசுவதும் தமிழ்தான். அவர்களுக்கிடையே ஜாதி விதியாசம் கூடைக்கவே கிடையாது. அவர்கள் சமயத்தில் தான் வேற்றுமையுண்டு. இலங்கையிலும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே எவ்விதமான வேற்றுமையுமே கிடையாது. சமீபத்தில் வடமாகாணத்தில் நடந்த பொதுத்தேர்தல் வெளிப்படையாகக் காட்டியுள்ளது.

முஸ்லிம்கள், தமிழர் ஒற்றுமையைக் குறிப்பிட்ட திரு மீனாட்சிசுந்தரம்பிள்ளை ஒன்றைக் குறிப்பிட மறந்துவிட்டார். சென்னை மாகாணத்துள்ள ஆந்திரர்கள் ஆந்திரநாடு தமக்கென்கிறார்கள் கன்னடர்தாம் தம்மை வேறாகப் பிரிக்குமாறு வேண்டுகிறார்கள். கேரளர்தாம் தம்மை வேறாகப் பிரிக்குமாறு வேண்டுகிறார்கள் தமிழர் தமிழரசு வேண்டுமென்கிறார்கள் பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்னையும் ஆங்காண்டு திரு மீனாட்சிசுந்தரபிள்ளை தமிழரசுக் கழகத் தலைவராயிருந்து இதைக் குறிப்பிடாது விட்டதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், ராவ்பகதூர் தாமோதரம்பிள்ளை போன்ற தமிழ் பெரியார்களை உலகுக்கீந்த நாடு யாழ்ப்பாணம்! மீண்டும் யாழ்ப்பாணத்தில் வீரமும், மானமுமுள்ள ஒரு மாபெரும் இலங்கு மாயிருந்தால், திரு மீனாட்சிசுந்தரம் போன்றவர்களுக்கு தமிழ் நாட்டில் இடங்கிடையாதென்று பயப்படுகிறோம் போலும். அதையிடு அவர் கவலைகொள்ளத் தேவையில்லை. தமிழனாக மானத்தைத் தான் பெரிதென மதிப்பவன் மற்றப்படி அவனுக்கு யாவரும் கேளிராவர்.

இலங்கையில் தமிழர், தமிழ் தன் கேடகவல்லை அரசியலில் தமக்குரிய பங்கைக் கேடகின்றார்கள். ஆதியில் தமிழர் இங்கு பகுத்தித்தரை தொடக்கம் தேவேந்திர முனை வரைக்கும் தம் ஆதிக்கத்தைச் செலுத்தியவர்களாவர். எல்லாளன் ஆகிய தமிழரசனொருவனைத் தவிர்த்து வேறெந்த அரசரும் இலங்கை முழுவதையும் ஆண்டதில்லை. வடமாகாணம் போர்த்துக்கேசர் ஆட்சிசெலுத்தும் வரைக்கும் தமிழரசர்களாலேயே ஆளப்பட்டுவந்ததாகச் சரித்திரம் இப்படியிருந்தும் தமிழ் மக்கள் இன்று சிங்களவருடன் ஒற்றுமையாக வாழ விரும்புகிறார்கள். இன்றுள்ள சிங்கள அரசியல்வாதிகள்தான் சிங்கள ராஜ்யம் தமிழ் ராஜ்யம் ஏற்படுத்த முனைந்துநிற்கிறார்கள். அதற்கெனஐந்தாம்படைத் தமிழர் மூலம் போலி ஒற்றுமை பாராட்டப் போகிறார்கள். உண்மைத் தமிழர் ஏமாறமாட்டார்கள்!

லைசென்ஸ் இல்லாத ஜவுளி வர்த்தகர்கள்

இருவருக்கத் தண்டனை ஒருவர் ஜாமீனில் விடுதலை

கொழும்பு, நவ. 10

புறக்கோட்டை செண்ட்ரல் ஜங்ஷன் வீதியில் அக்டோபர் 30-ம் தேதி போலிஸார் சோதனையிட்டபோது லைசென்ஸ் இல்லாது ஜவுளி வர்த்தகம் செய்த மூன்றுபேர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த எச் என். வி அப்துல் சாமி என்பவர் இரு புதிய சாரங்களை விற்றனைக்கு வைத்திருந்த குற்றத்துக்கு கொழும்பு தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு பண்டிதர் குணவர்தனா மூன்று மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

புறக்கோட்டை சிரிப்பிணி லேனைச் சேர்ந்த எம். காமி என்பவர் எட்டு சாரங்களை விற்றனைக்கு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் அவருக்கு ரூ 500 அபராதம் விதிக்கப்பட்டது.

புறக்கோட்டை டாம் வீதியைச் சேர்ந்த ஏ. எம். வில்லவராயன் என்பவர் 6 சாரங்களை விற்றனைக்கு வைத்திருந்ததாகக் குற்றப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியல்லவென்று கூறி தன் மேல் நீதிபதி எதிரியை ரூ 500 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கு விசாரணையை 25-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

மார்ஷல் திட்டம் யார்?

உலகில் பெரிய உத்தியோகம்

வாஷிங்டன், நவ. 10

ஐரோப்பாவுக்கு "உதவி" அளிக்கும் மார்ஷல் திட்டத்தை பிரதம நிர்வாகி பதவி சம்பந்தமாக இரு பெயர்கள் இங்கு அடிபட ஆரம்பித்திருக்கின்றன இது உலகிலேயே மிகப் பெரிய உத்தியோகங்களில் ஒன்றாம்

ஒருவர் 52 வயது செனெட்டர் ஜான் ரொபர்ட் மாரியன் போல்லேட்டாகும். இப்பதவியை நிறுவ வேண்டும் என்று ஆலோசனை கூறிய ஜனாதிபதியின் சபையை நிறுவுவதற்கு முக்கிய பங்கு வகித்தவராவர். அமெரிக்க காங்கிரஸின் ஸ்டியரசுப் பெரும்பான்மையை இவரை அங்கீகரிக்கும் என்று நம்பப்படுகிறது

மற்றவர் லூவிஸ் டௌகிளஸ் இவர் இப் பதவிக்கு ஏற்றவர் என்று கருதப்படுகிறார். இவர் லண்டனில் அமெரிக்க ஸ்தானிகராய் இருந்தவர். தற்போது சில தகவல்களைத் தருவதற்காக இங்கு வந்துள்ளார். அவரை விமான நிலையத்தில் கண்டு இது சம்பந்தமாக விசாரித்தற்கு தமக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டார் அவர்.

அரசாங்க இலாகா, வெளிநாட்டு அதிகாரிகள் இந்நியமனம் இப்போது நடைபெறாது என்று கூறிவிட்டார்கள்.

(ராய்ட்டர்)

ரயிலில் மோதுண்டு மரணம்

மொரட்டுவை, நவ. 10

எகொடை உயானா ரயில்வே ஸ்டேஷனுக்கும் பாணந்துறை ரயில்வே பாலத்துக்கும் இடையில் புதன்கிழமை இரவு திரு எம்.செறுலுயிம்பொன்னுண்டோ எனபவர் ரயிலில் மோதுண்டு மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது.

கர்ப்பத்திலிருப்பது ஆணா பெண்ணா?

அறிவது சுலபமென்கிறார் விஞ்ஞானி

லண்டன், நவ 6—

எடின்பரோ சர்வகலாசாலையைச் சேர்ந்த பிரஜா விருத்தி தத்துவ நிபுணரான புரபஸர் ஆர். ஏ. ஃபிஷரின் சித்தாந்தத்தின்படி கர்ப்பத்திலிருக்கும் சிசு ஆணா அல்லது பெண்ணா என்பதை விஞ்ஞானத்தின் உதவியாக அறிவலாம் என்று ஏற்படுகிறது.

சென்ற இரவு நடந்த எடின்பரோ விவாக ஆராய்ச்சி சங்கத்தில் அவர் ஆண் பெண் விவரமறிய ஆராய்ச்சி செய்வதற்கான செலவு மிகவும் குறைவென்றும் உலகம் ஆண் பிரஜாவிருத்தியையே அதிகம் கோருகிறதென்றும் விஞ்ஞானத்தினால் ஆண் பெண் அறிவது மிக சுலபமென்றும் கூறினார்.

சட்ட விரோதமாக பணம் கடத்த முயற்சித்த சீனர்

6 பேர்களுக்கு அபராதமும் பணம் பறிமுதல்

கொழும்பு, நவ. 10

திருக்கோணமலையில் நீண்ட கால வேலை செய்து விட்டு ஹொங்காங்கிற்குச் செல்வதற்கு கப்பல் ஏற கொழும்புக்கு ஆறு சீனர்கள் வந்திருந்தனர் இவர்களை சுங்க இலாகாவின் அதிகாரிகள் இருவர் சோதனை செய்து பிடித்து ரூ 20000-க்கு அதிகம் மதிப்புள்ள அமெரிக்க டாலர் நோட்டுக்களும், 65 பவுன் மதிப்புள்ள பணமும் ஜவுளியும் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டன. பணமும் ஜவுளியும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ஆறு பேர்களுக்கும் தலா ரூ 500 அபராதம் விதிக்கப்பட்டது. இதன் பின் மூன்று சீனர்கள் மட்டுமதான் ஹொங்காங்கிற்குப் பிரயாணம் செய்ய முடிந்தது. மற்றவர்கள் செல்ல முடியவில்லை.

பொறுப்பாட்சிகோரிக்கைகளுக்கு ராஜா சம்மதம்

16-ம் தேதி புதுபிரகடனம் வெளிவரும்

புதுக்கோட்டை, நவ 7—

புதுக்கோட்டை மக்களின் கோரிக்கைகளையெல்லாம் பூர்த்தி செய்து புதிய பிரகடனமொன்றை 16உ வெளியிடுவதாக புதுக்கோட்டை ராஜா சதயாக்ஷ கமிட்டித் தலைவருக்கு கடிதமொன்று அனுப்பியிருக்கிறார்.

எனவே 15உ ஆரம்பமாக விருந்த சத்யாகிரஹம் 30-ம் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

சர்வதான காங்கிரஸிற்குப் தர்பாருக்கு மிடையில் பேச்சுவார்த்தை நடத்திய ஸ்ரீ சர்கணேசனின் முயற்சியாள் நேற்றிரவு 1 மணிக்கு வெற்றி அடைந்தன. ராஜா எல்லா கோரிக்கைகளுக்கும் இணங்கினார்.

சமஸ்தான காங்கிரஸின் அடியில் கண்ட கோரிக்கைகளையே ஸ்ரீ சர் கணேசன் ராஜாவிடம் சமர்ப்பித்தார்

1. பூராவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அ. நி சபை சமஸ்தான சட்டசபை போல இயங்க வேண்டும். ஜனத் தொகையில் 10000 பேருக்கு ஒரு மெம்பர் வீதம் புதிய அரசியல் திட்டத்தின்படி தேர்தல்கள் நடக்கும் வரையில் அ. நி. சபை அவ்விதம் நடக்கவேண்டும்

2. சிறுபான்மையோருக்கும் அவர்களது சிரதைகளுக்கும் பாதுகாப்பும் விசேஷ அதிகாரங்களும் மிக்க அதிகாரங்களும் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மந்திரி சபையின் பொறுப்பாக்கப்படவேண்டும்.

3 அ. நி. சபை 6 மாதங்களுக்குள் ஆரம்பமாக வேண்டும்; அதுவே புதிய மந்திரி சபையைத் தெர்ந்தெடுக்க வேண்டும்.

4. தற்போதுள்ள சட்டசபை கலைக்கப்பட வேண்டும்

5. தற்போதுள்ள திவான் முதல் கவுன்ஸிலர் இரு மந்திரிகள் இவர்களின் சர்வீஸகள் இரண்டு மாதகதிற்குள் ரத்து செய்யப்பட வேண்டும்.

6 சமஸ்தான காங்கிரஸைக் கலந்துகொண்டு கடிதசார்பில்லாத இரண்டு மந்திரிகளுடன் ஒரு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படவேண்டும்.

பாகிஸ்தானை கலைத்துவிட்டு இந்திய யூனியனில் சேருக

ஜின்னா, லியாகத் அலிக்கு தேசிய முஸ்லிம் தலைவர்கள் யோசனை

புதுடில்லி, நவ. 7—

"புதிதாகநிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாகிஸ்தானைக் கலைத்துவிட்டு இந்தியாவுடன் ஒன்றிக் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ ஜின்னாவையும் ஸ்ரீ லியாகத் அலிகானையும் கேட்டுக்கொள்கிறோம்" என்று தேசிய முஸ்லிம் தலைவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கோருகின்றனர்.

ஸ்ரீமான்கள் அஸீஸ் பாகு வாயமீர் முஷ்டாக் அஹம்மது டிலி மாகாண கா. க. உப தலைவர் ஹகீம் கலீலுர் ரஹமான் முதலிய பல தேசிய முஸ்லிம் தலைவர்கள் இவ்வறிக்கையை விடுத்துள்ளனர்.

'அரசியல் சூதாட்டத்தில் கெப்ஸ்ஸின் பிரசாரதந்திரங்களையும் ஹிட்லர் வழிகளையும் கையாளுவதால் யாதொரு பயனும் கிடைக்காது என்பதை ஸ்ரீ ஜின்னாவும் லியாகத் அலிகானும் உணர வேண்டும்" என்று அறிக்கை கூறுகிறது

ஸ்ரீ ஸாஹிர் யோசனை

அஹமதாபாத், நவ 7—

ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ஹிந்து மஹாசபை பொதுக் காரியதரிசி ஸ்ரீ அசுடோஷ் லாகிரி கூறியதாவது:—

பாகிஸ்தான் கோரிக்கைக்கு இணங்கிய பின் நாட்டில் அமைதி நிலவும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதினார்கள். ஆனால் இப்போது நாட்டின் பல பாகங்களிலும் கலகம் நடப்பதோடு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே யுத்தம் ஏற்படுவது நிச்சயம் என்றும் தெரிகிறது. பாகிஸ்தானுடன் யுத்தம் தொடங்கினால் காங்கிரஸை ஹிந்து மகாசபை ஆதரித்து நிற்கும்.

தங்களது விஸ்வாசத்தை முஸ்லிம்கள் நிரூபித்துக் காட்டும்வரை இந்திய முஸ்லிம்களின் ஒட்டுரிமையைப் பறிப்பதோடு அவர்களுக்குப் பெரிய உத்தியோகங்களும் கொடுக்கக் கூடாது. ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் வீக் தலைவர்களைப் பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட வேண்டும்."

ஆற்றங்கரையில் பிரேதம்

ஜெர்மன் யுத்தக்கைதி மாண்டு கிடந்தார்

லண்டன், நவ. 10

41 வயது ஜெர்மன் யுத்தக் கைதி ஒருவர் நோதம்பர்லந்தில் ஒரு ஆற்றங்கரையில் மாண்டு கிடக்கக் காணப்பட்டார். ஒரு விவசாயியே மேற்படி பிரேதத்தைக் கண்டுபிடித்து தகவல் கொடுத்தார்.

இது சம்பந்தமாக அவரது கைதி முகாமில் உள்ள 400 ஜெர்மன் கைதிகளும் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். பிரேத விசாரணையின்போது உதைத்தோ அல்லது தடி கொண்டு அடித்தோதான் அவர் இறந்திருக்கவேண்டும் என்று தெரிய வந்தது.

(ராய்ட்டர்)

கிரேக்க மன்னருக்கு நெருப்புக் காய்ச்சல்

ராஜப்பிரதிநிதி நியமிக்கப்படலாம்

ஏதென்ஸ், நவ 9

கிரேக்க உதவிப் பிரதமரும் அயல் நாட்டு மந்திரியுமான ட்ஸல்டாரிஸ், நீதி மந்திரி லாடோஸ ஆகியோர் நெருப்புக் காய்ச்சலுக்காளாகியிருக்கும் கிரேக்க மன்னர் பாலை இன்று அவரது அரண்மனையில் போய்ப் பார்த்தனர். அவர் சுகமடையும் வரை ஒரு ராஜப் பிரதிநிதியை நியமிப்பதுபற்றி அவர்கள் யோசித்து வருகின்றனர்

கிரேக்க வட்டாரங்கள் 1943-ம் வருஷத்து ஜார்ஜ மன்னர் பிரகடனத்தை அமுக்கி விடுவதற்கு இப்போ முயன்று வருகின்றன. இப்பிரகடனம் மன்னர் லண்டனுக்குச் செல்வதற்கு முன்னர் செய்யப்பட்டது சில சமயம் அவர் போகும் கப்பல் ஜெர்மன் டார்பீடோக்குண்டுகளுக்கு இரையாகலாமென்று அப்போது அஞ்சப்பட்டது. இப்பிரகடனத்துல அப்போதைய பிரதமர் ட்ஸடெரோஸ் மன்னர் இறந்தால் அல்லது சுயவினமுற்றால் ராஜப் பிரதிநிதியாக கடையாறுவார் என்று கூறப்பட்டுள்ளது.

குடியரசு முன்னேற்றக் கட்சித் தலைவரான அவர் தற்போது அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றார். (ராய்ட்டர்)

பர்மா வாலிபர் முயற்சி

சர்வதேசத் தொடர்பு ஏற்படுத்துவர்

நியூயார்க், நவ. 10

பர்மா வாலிபர் தூதுக்கோஷ்டி ஒன்று அமெரிக்க வந்திருந்து ஐந்து வாரகாலமாக அமெரிக்க வாலிபர் ஸ்தாபனங்களோடு தொடர்புகள் ஏற்படுத்துக்கொண்டு நேற்றிரவு, விமானமார்க்கமாக இங்கிருந்து புறப்பட்டது.

பிரிட்டன், ஸவீடன், பிரான்ஸ், யூகோஸ்லேவியா, செக்கோஸ்லவியா, டென்மார்க் முதலிய இடங்களுக்குத் தூதுக்கோஷ்டி போகும் என்றும் அங்கும் இதே வித தொடர்புகளை இத்தூதுக்கோஷ்டி நிறுவிக்கொள்ளும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ராய்ட்டர்)

வழக்கு சரியான முறைப்படி நடத்தப்படவில்லை

அசைஸ் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்

கொழும்பு, நவ 10

கொச்சியாவத்தையிலுள்ள லூயிஸ் சிங்கோ என்பவருடைய வீட்டை உடைத்து உட்புகுந்து பலாத்காரப் பிரயோகம் செய்ததாகவும் கத்தியால் குத்தியதாகவும் எச். எம். தர்மசேனா என்பவர் மீது குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது நீதிபதி சிரு டயஸ் இவ்வழக்கு விசாரணையை நடத்தினார்.

கொச்சியாவத்தையைச் சேர்ந்த லூயிஸ் சிங்கோ என்பவர் தமது வீட்டில் மே மாதம் 29-ம் தேதி இரவு வீட்டில் உள்ளவர்கள் நித்திரையாகியிருக்கும்போது வாயிற்கதவை உடைத்து எதிரி உட்புகுந்ததாகவும் இவரது மகள் மிகினோனா சத்தமிட்டதாகவும் எதிரி அவருடைய மகளை பலாத்காரம் செய்ததாகவும் மகளுடைய சத்தம் கேட்டு தாம் சென்று எதிரியைப் பிடிக்க முயற்சிக்கையில் அவர் கத்தியால் குத்திவிட்டு ஓடி விட்டதாகவும் கோர்ட்டில தெரிவிக்கப்பட்டது சாட்சியங்கள் சரியானபடி இல்லாததால் ஜூரர்கள் வழக்கை மேற்கொண்டு நடத்த விரும்பவில்லை. இதன் மேல நீதிபதி "நல்ல வழக்கை போலிஸாரும் மாஜிஸ்டிரேட்டும் சரியான முறைப்படி ஆரம்பத்திலேயே நடத்தவில்லை" என்று கூறி எதிரியை விடுதலை செய்தார்.

பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தில் வெடிகுண்டா?

அநாமதேயப் பேர்வழியின் புரளி

ரோம், நவ. 9

ரோமாபுரி பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயம் நேற்றுப் பற்பகல் வெடி குண்டுகளால் தகர்க்கப்படும் என்று ஒரு டெலிபோன் செய்து கூறியது. இதன் பயனாக முழு ஸ்தானிகர் காரியாலயக் கட்டிடமும் வெகு ஜாக்ரதை சோதனையிடப்பட்டது. முடிவில் இது வெறும் புரளி என்றே தெரிய வந்தது. டெலிபோன் செய்தியை அனுப்பியவர் யார் என்று தெரியவில்லை

உற்பத்தியைப் பெருக்க ஒன்பது யோசனைகள்

சமரசத்துக்கு முன்வருமாறு தொழிலாளருக்கு வேண்டுகோள்

"சுயநல தலைவர்களை நெருங்கவிடாதீர்"

புதுடில்லி, நவ 7—

நாட்டில் உள்ள தொழிலாளர் "ஏதாவதொரு தொழில் சமரசம்" செய்துகொள்ள முன்வரவேண்டும் என்று பம்பாய் சர்க்காரின் தொழிலாளர் மந்திரி ஸ்ரீ குல்ஜேரிலால் நந்தா நேற்று ரேடியோவில் பேசுகையில் கேட்டுக் கொண்டார் "இந்த நெருக்கடியான கட்டத்தில் உற்பத்தியைப் பெருக்க" என்பது யோசனைகளை அவர் கூறியிருக்கிறார்.

பின்கண்ட விஷயங்களை நினைவில் வைத்திருக்குமாறு தொழிலாளர்களை ஸ்ரீ நந்தா கேட்டுக் கொண்டார்:—

1 தயவுசெய்து உங்கள் தலைவர்களை விவேகத்துடன் தேர்ந்தெடுங்கள். அபரிமிதமான கோரிக்கைகளை விடுப்பதன் மூலம் தொழிலாளரின் ஆதரவைப் பெற முயற்சிப்போரையும், தொழிலாளருக்கு நலவசதிகளை பெற்றுத் தருவதை விட தகராறையும் சச்சரவுகளையும் கிளப்பி விடுவதில் அதிக சிரத்தை காட்டுபவர்களையும் அண்டவிட வேண்டாம்.

2 தகுதிவாய்ந்த சங்க அதிகாரிகளைக் கொண்ட பலமான சங்கங்களை அமைத்துக் கொள்ளுங்கள் ஒரு தகராறை மத்திய தீர்ப்பத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்றால் ஸ்டிரைக் செய்யவே கூடாது என்பதை உங்களது சங்கத்தின் கொள்கையாகக் கொள்ளுங்கள்.

3. தகராறுகளைப் பைசல் செய்யவும் தொழிலாளரின் குறைகளை நிவர்த்திக்கவும் சர்க்கார் அளித்துள்ள சாதனங்களை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். காலதாமதமோ, பெரிய சங்கடமோ எழுந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள்.

4 வேலைக்கு வராமல் இருப்பதைத் தவிர்க்க முடியுமானால் தவிர்க்கவே வேண்டும்.

5. வேலை நேரத்தில் வேலையிலேயே முழு கவனத்தையும் செலுத்தவேண்டும்.

வேலை நேரத்தில் தலையீடுகளைக் கூடியவரை குறைக்க வேண்டும்

6. மந்தமாக வேலை செய்வது பாவம் ஒவ்வொரு தொழிலாளியும் தனால் இன்ற தொகை அதிகமாக சிறமையாக வேலைசெய்ய வேண்டும்.

7. கூட்டு உற்பத்திக் கமிட்டியை அமையுங்கள். இக்கமிட்டி வெற்றிகரமாக வேலை செய்ய இயன்றதையெல்லாம் செய்யுங்கள்.

8. சர்மான்கள் வீணானாலும் இயந்திரத்துக்கோ உற்பத்தியான பொருட்களுக்கோ சேதம் ஏற்பட்டாலும் தேசத்திற்கே நஷ்டம்.

9 உற்பத்தியைஅபிவிருத்தி செய்ய உங்களுக்கு ஏதாவது யோசனைகள் தோன்றினால் அவற்றை சங்கத்துக்கோ உற்பத்திக் கமிட்டிக்கோ அறிவிக்கவும்.

பாலஸ்தீன் எல்லைகளில் அராபியத் துருப்புகள்

பிரிவினையை எதிர்த்துப் போராட ஆயத்தம்

அராபிய லீக் காரியதரிசி அறிக்கை

பாக்தாத், நவ 9

அராபிய லீக் பொதுக் காரியதரிசி அப்துல் ரஹ்மான் அசாம் பாஷா வருமாறு தெரிவித்தார்:— சிரியா, லெபானன், எகிப்து, ட்ரான்ஸ் ஜோர்டான் ஆகிய நாடுகளில் ராணுவங்கள் பாலஸ்தீன எல்லைப்புறங்களில் நிறுத்தப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் துருப்புகள் பாலஸ்தீனை விட்டுக் காலி செய்கையில், பாலஸ்தீனத்தை யூதர் ஆக்கிரமித்துக் கொள்ளாதபடி பாதுகாக்கவே அராபிய ராணுவங்கள் பாலஸ்தீன எல்லைப்புறங்களில் நிறுத்தப்படுகின்றன.

நான் ஈராக் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசியதன் பயனாகப் பெய்ரூத் தீர்மானத்தை உடனே நிறைவேற்ற ஈராக் சர்க்கார் உடன்பட்டனர். யூதர்களால் பாலஸ்தீனம் ஆக்கிரமிக்கப்படின் அதைப் பாதுகாக்க ராணுவ உதவி செய்வதாக பெய்ரூத்தில் நடைபெற்ற அராபிய லீக் நிர்வாகசபையின் கடந்த கூட்டத்தில் 7 அராபிய நாடுகள் கூடித் தீர்மானம் நிறைவேற்றியது.

இறைரவு அசாம்பாஷா பெய்ரூத்துக்குப் பயணமானார், வழியில் அவர் சுஊதி அரேபிய மன்னர் இபுனு சுஊதைச் சந்தித்துப் பேசுவார்.

பாலஸ்தீனத்தைப் பாதுகாக்க 2 லட்சம் பவுன்வரை செலவு செய்ய அனுமதியளித்து இன்று ஈராக் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஈராக்கின் மாஜி பிரதம மந்திரி டாக்டர் பச்சாச்சி பின்வருமாறு தெரிவித்தார்:— பாலஸ்தீனம் பிரிவினை செய்யப்பட்டால் தனது நாடு ஐக்கிய தேச ஸ்தாபனத்திலிருந்து விலகிவிடும் என்று ஐக்கிய தேச அசெம்பிளியில் பிரதிநிதியான சுஊதி அரேபியாவின் அங்கிய நாட்டு மந்திரி எமிர் பெய்சல் கூறியதை நான் ஆதரிக்கிறேன். பிரிவினை செய்யத் தீர்மானிக்கப்படின் உடனே எல்லா அராபிய நாடுகளும் ஐக்கியதேச ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட வேண்டும். யூதர்களும் அவர்களை ஆதரிக்கும் வல்லரசுகளும் எவ்வித ஆயுதங்களைக்கொண்டு போராட முன்வருவார்களோ அதே ஆயுதங்களைக் கொண்டு நாமும் அவர்களுடன் போராட வேண்டும். [ராய்ட்டர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ச்சுகலைசேர்க்க இந்தியாவின் ஆட்சேபம்

கோவாவில் நடத்தும் அக்கிரமங்களை ஸ்ரீமதி பண்டிட் அம்பலப்படுத்துகிறார்

நியூயார்க், நவ 8

ஐ. நா. வில் அயர், போர்ச்சுகல், டிரான்ஸ்ஜோர்டான், இதாலி, ஆஸ்டிரியா ஆகிய தேசங்களை அனுமதிப்பது பற்றிய சிபார்சு மீது அரசியல் கமிட்டியில் விவாதம் நடந்தது. போர்ச்சுக்கல் சிபார்சை எதிர்த்து ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் சொன்னதாவது:- அமைதிக்குப் பங்கம்ஏற்படுத்துவதாக குறிப்பிட்ட குற்றச் சாட்டிலாத எல்லா தேசங்களையும் அனுமதிக்க வேண்டியதே சிபார்சு செய்யப்பட்டுள்ள தேசங்களில் மெஜாரிட்டி தேசங்கள் அனுமதிக்கு அருகதையுடையவை

இந்தியாவிலுள்ள தனது சிறிய காலனியில் போர்ச்சுக்கல் கடைபிடிக்கும் கொள்கையை ஸ்ரீமதி பண்டிட் டலமாகத் தாக்கினார்.

ஸ்ரீமதி பண்டிட் சொன்னதாவது:- "இந்தியாவிலுள்ள போர்ச்சுக்கல் காலனியாகிய கோவாவில் அடக்குமுறையும் டலதீமைகளும் தாண்டவமாடுகின்றன. அரசியல் குற்றத்துக்காக சுதந்திர இயக்கத் தலைவர் ராணுவக் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை மட்டிலும் நான் இங்கு சுட்டிக் காட்டுகிறேன். போர்ச்சுகலின் பிரதான உரிமையின் யோக்யதை இது. அங்குள்ள பிரஜைகளுக்கு மிகவும் சாதாரணமான பொறுப்பாட்சி கூட கிடையாது. பொறுப்பாட்சி கேட்டால் குருப்பரை (போர்க் கப்பல்) அனுப்பி விடுகிறார்கள்.

போர்ச்சுகல் சர்க்காரானது பாஸிஸ கொள்கையை கடைப்பிடிக்கிறதென சென்ற வருஷம் கூறியதையே இப்பொழுதும் வற்புறுத்துகிறேன். ஒரு தேசத்தில் சர்வாதிகாரத்துக்கு அனுமதி தரவது ஐ. நா வின் கொள்கைக்கு விரோதமானதென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்

போர்ச்சுகல் சிபார்சை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

யுத்த காலத்தில் ஜெர்மன் கப்பல்கள் போர்ச்சுகல் துறைமுகத்தில் ஒளிந்து கொள்ள இடம் தந்ததையும் ஸ்ரீமதி பண்டிட் சுட்டிக் காட்டினார்.

பத்திரிகைகளுக்கு சர்க்கார் அறிக்கைகள்

தரிழ் பத்திரிகைகளுக்கு தமிழில் அனுப்பப்படும்

சென்னை, நவ. 7

தமிழ், தெலுங்கு, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அந்தந்த பாஷையிலேயே அதாவது தமிழ்ப் பத்திரிகைக்கு தமிழிலும் தெலுங்கு பத்திரிகைகளுக்கு தெலுங்கிலும், ஆங்கில பத்திரிகைகளுக்கு ஆங்கிலத்திலும் தமது அறிக்கையையும் செய்திகளையும் அனுப்ப சென்னை சர்க்கார் தீர்மானம் செய்துள்ளனர். கூடிய சீக்கிரம் இந்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சையில் தவறியதால் மாணவன் தற்கொலை

மொரட்டுவை, நவ 10

கொள்ளுபிட்டியைச் சேர்ந்த எஸ் வி. மண்டலேஸ்வரன் (18 வயது) என்னுமவன் ஜோஸப் கல்லூரி மாணவன் லண்டன் மெட்ரிக் பரீட்சையில் சித்தியடையாததுகாரணமாக ஓடும் ரயிலின் முன் பாய்ந்து விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது. சனிக்கிழமை அங்கு வானுவுக்கும் ரதமலானைக்கும் இடையில் இவ்விபத்து நடைபெற்றது. மாணவன் தனது பெற்றோருக்கு எழுதி வைத்திருந்த கடிதத்தை மொரட்டுவை போலிஸார் கண்டெடுத்தனர். அதில் பரீட்சையில் தான் தவறிவிட்டதால் தற்கொலை செய்வதாக எழுதப்பட்டிருந்தது. பெற்றோர் ஆளை இனங்கண்டு கொண்டனர்.

சோவியத் நாட்டில் ஓர் நாள்

ஒரே தினத்தில் எடுத்து முடிந்த செய்திப்படம்

புரட்சிவிழாச் சினிமா வெளியீடு

மாஸ்கோ, நவ 9

சோவியத் ரஷியாவின் முப்பதாவது புரட்சி ஞாபகவிழா சம்பந்தமாக "வெற்றி நாட்டிலே ஒரு நாள்" என்ற பெயருடன் ஒரு புதிய செய்திப்படம் வெளியாக்கப்பட்டது.

இச்செய்திப் படத்தின் ஒவ்வோர் கரட்சியும் நாட்டின் பல பாகத்திலும் பல் வேறு படப்பிடிப்பு நிபுணர்களால் ஆகஸ்டு 14-ம் தேதியன்றே எடுத்து முடிக்கப்பட்டதாகும். புதியஸ்டாலின் ஐந்து வருடத்திட்டத்தின் ஒரு நாள் அலுவல்களைச் சித்தரிப்பதே இப்படத்தின் நோக்கம்.

சக்காலின் தீவின் புதிய கூட்டுப் பண்ணைகளும்- ஒரு எரிமலையின் சாரலைச் சென்றடையும் பூமி சாஸ்திர நிபுணர்களும், - மூன்று வருடத்திற்கு முன் பூளோகப் படத்திலே காணப்படாத செவரோ ஊரல் ஸ்க என்னும் ஊரை மலைப் பிராந்திய நகரில் புதிதாய் அமைக்கப்படும் ஓர் வீதியும், - இதுபோன்ற வேறு பல காட்சிகளும் குறிப்பிடத்தக்கன. (ராய்ட்டர்)

அலுமினியம் பாத்திரம் உபயோகிப்பவர்களனிக்கவும்

சர்க்கார் எச்சரிக்கை

சென்னை, நவ. 9

சென்னை சர்க்கார் பின்வரும் கண்ட அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

சிலர் சமைக்கவும், சமைத்த பண்டங்களை வைக்கவும் அலுமினிய பாத்திரங்களை உபயோகிக்கிறார்கள். அலுமினியம், பளபளவென்று இருப்பதுடன் கனமில்லாமலும், லேசாகவும் இருக்கின்றன. உப்பு, புளி இவைகளில் அலுமினியம் சிறுக சிறுக கரைந்துவிடுகின்றன இதனால் அவ்வளவு பதகம் இல்லை என்றாலும் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக அலுமினியம் உபயோகிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

விமானம் மற்றும் இதர யுத்த கால சாமான்களிலிருந்து கிடைக்கும் அலுமினியத்தால் செய்யப்படும் பாத்திரங்களை உபயோகிப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனெனில் இதில் பலவித உலோகங்கள் கலந்திருக்கின்றன. இதை உபயோகிப்பது உடல் நலத்திற்கு தீங்கு விளைவதாகும்.

பாரீஸ் வேலைநிறுத்த முடிவு

பாரிஸ், நவ 9

பாரிஸ் பொதுச் சேவைத் தொழிலாளர்கள் அரசாங்கம் அளிக்கும் சம்பளச் சலுகைகளை ஏற்றுக்கொண்டு தமது வேலை நிறுத்தத்தை முடித்து விடுவதென்று தீர்மானித்து விட்டனர்.

இவ்வேலை நிறுத்தத்தால் பொதுச் சேவைகளில் 80 வீதம் பாதிக்கப்பட்டது. அதுதுடன் வீதிகளில் அசுத்தவஸ்துகள் குவிந்துவிட்டன இதனை சுகதம் செய்வதற்கு நேற்று ராணுவத்தினர் அழைக்கப்பட்டனர்

ஆஸ்பத்திரிச் சலவைத் தொழிலாளர், ஜலவினியோகத் தொழிலாளர், முனிசிபல் தொழிலாளர் பாரிஸ் நகரில் பெருங்கிடக்கும் உணவச்சிலைகளைச் சுத்தம் செய்வோர் ஆகியோருக்கு வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்படவில்லை (ராய்ட்டர்)

2வது இந்திய குடியேற்ற நாடுகள் மாநாடு

22, 23-ம் தேதிகளில் சென்னையில் நடைபெறும்

சென்னை, நவ. 9

ஸ்ரீ. டி. கே. சுவாமிநாதன் பின்வருமாறு எழுதுகிறார்:

'இந்திய மக்களில் சற்றேறக்குறைய 35 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள், தென் கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய பிரதேசங்களில் பிதறுண்டு கிடப்பது எல்லோரும் அறிந்த விஷயமே இந்திய குடியேற்ற நாடுகள் சங்கம் அவ்வாறு சென்ற தாயகத்தை விட்டுச் சென்ற மக்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும், பொதும் பாடுபட்டு வந்தது பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இடையில் யுத்தத்தின் காரணமாக நமக்கும் அவர்களுக்கும் இருந்த தொடர்பு அறுந்து விட்டது.

"இப்பொழுது நிலைமை மாறி விட்டது. அடிமை இந்தியா சுதந்திர இந்தியாவாக மாறி விட்டது. இந்தியர்கள் உலகத்தின் எந்த மூலைமுடுக்குகளில் இருந்தபோதிலும அவர்களைத் தேடிப பிடித்து அவர்களின் வாழ்க்கையை சீரமைக்கவேண்டிய அவசியம் நமக்கு உண்டாகிறது. உறசாகத்தைத் தட்டி எழுப்பி நடைமுறையில் கொண்டு வருவதே இந்த இரண்டாவது இந்திய குடியேற்ற நாடுகள் மகாநாட்டின் முக்கிய நோக்கம், மகாநாடு நவம்பர் மாதம் 22, 23-ம் தேதிகளில் சென்னையில் கூடுகிறது. வெளி நாடுகளில தங்கிவிட்ட நம்மவர்களின் அரசியல் பொருளாதார, சமூக நிலைமை எவ்வாறு ஒருக்கிறது, இனி எப்படி சீரமைக்கப்பட்டு போகிறது என்பவைகளைப்பற்றி அறிஞர்கள் எடுத்துரைப்பார்கள் இந்திய மக்களின் குறைகளையும, இன்னல்களையும் களைவதற்கென பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

மலேயா நாட்டின் மாஜி ஏஜெண்டாக இருந்த ஸ்ரீ. ரா. சுப்பையா நாயுடு தலைமைகிப்பார். மகாநாட்டின் நடவடிக்கைகளில கலந்துகொள்ளவிரும்புகிறவர்களும் நன்கொடை அனுப்புபவர்களும் டி. கே. சுவாமிநாதன் 4 54, பாலகிருஷ்ண ரோட், மயிலாப்பூர், சென்னை 4 என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.

இராணுவ லொரிக்கு ஒருவர் பலி

மருதானை விபத்தில் இன்னொருவருக்கு காயம்

கொழும்பு, நவ. 10

மருதானை ரயிலவே ஸ்டேஷனுக்கு எதிர்ப் புறத்தில் பஞ்சுவத்தை ரயதாவல் சனிக்கிழமை மாலை சுமார் 7-30 மணிக்கு நடந்த இராணுவ லொரி விபத்தில ஒருவர் கொல்லப்பட்டும் இன்னொருவர் படு காயமடைந்தும் உள்ளார்.

விபத்து நடந்த பின் இவர்களை தாக்கிய இராணுவ லொரி நிற்காது சென்றுவிட்டதென்றும் அந்தலொரியைத் துரதிஷ்டச் சென்றது பிரயோசனப் படவில்லை யென்றும் கூறப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த எம் ஜப்பார், சினைததுரை ஆகிய இருவரும் ஆஸ்பத்திரிக்கு உடனே அனுப்பப்பட்டனர் என்றும் அங்கு ஜப்பார் மரணமானார் என்றும் கூறப்படுகிறது.

விவசாயத்தைப் பெருக்க முயற்சி

இயந்திர சாதனங்கள் உபயோகம்

சென்னை சர்க்கார் நடவடிக்கை

சென்னை, நவ. 5

பார்ட்ஸன் டிராக்டர் இயந்திரக் கலப்பை வேலை செய்யும் விதம் விவசாய தோட்ட சங்க நிலத்தில் நடத்திக் காட்டப்பட்டது. இதற்குப் பிரதமர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் ஏற்பாடு செய்திருந்தார் பல மந்திரிகளும் ஏராளமான சட்ட சபையினரும் இக்காட்சியைப் பார்வையிட்டனர்.

இந்த டிராக்டர் 3 படைச்சால் உழக்கூடியது நிலத்தின் தன்மைகேற்ப 11 அங்குல அகலம் வரை ஒரு நாளில் 5 முதல் 8 ஏக்கர்களை அது உழ முடியும். தொளி (ஈர) நிலத்தில் டிராக்டரால் உழுவது கஷ்டமே என சட்ட சபையினர் கூறினர். காய்ச்சல் நிலத்தில் உழுது போட்டு விடலாம் என டிராக்டரை இயக்குவோர் பதிலளித்தனர்.

நமது சிறு சிறு நிலங்களை உழ இந்த டிராக்டர் பயன்படாது. கூட்டுறவு முறையில் நடத்தும் பண்ணைகளில் இதை உபயோகிக்கலாமென்றும் யூனிட்டுக்கு 100 ஏக்கர் வீதம் பண்ணையில் அளவு இருக்க வேண்டுமென்றும் பிரதமர் கூறினார்

நடுத்தர நிலத்தில் 6 முதல் 7 அங்குலம் ஆழத்தில் ஒரு ஏக்கரை உழ புக்கால் காலன் மண்ணெண்ணை செலவாகும். இதற்கு அவசிய மான மண்ணெண்ணையின் விலை காலன் ரூ 1-4 0 இதற்கு ரேஷன் இல்லை மற்றும் நீர்ப்பாய்ச்சும் இயந்திரம், கருப்பஞ்சார் பிழியும் இயந்திரம் ஆகியவற்றிற்கு சக்தி அளிக்கவும டிராக்டரை உபயோகிக்கலாம். அறுவடை, வைக்கோல் சேகரிப்பு தானியங்களை மூடையில் கட்டுதல் தரையை சமன் செய்தல், விதை விதைத்தல், உரம் சிதறுதல் முதலிய பல உபயோகங்களுக்கும் பயன்படும் சாதனங்கள் டிராக்டரில் அமைந்துள்ளன.

உணவு நெருக்கடியைத் தீர்க்க இந்த இயந்திரம் பொஞ்சேவை செய்ய முடியும் என சர்க்கார் கருதுகிறது.

டிராக்டர் வாங்க சர்க்கார் முடிவு

சொற்ப நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து உதவும் பொருட்டு 49 செட்டுகள் உள்ள சிறிய இயந்திரக் கலப்பைகளை விலைக்கு வாங்க சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது. இந்த இயந்திரக் கலப்பைகளின் விலை சுமார் ரூ மூன்றரை லட்சமாகும். இவ்வாறு வாங்கப்படும் இயந்திரக் கலப்பைகள் சொற்ப நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு உழுவதற்கும் நிலத்தைச் சீர்திருத்துவதற்கும் வாடகைக்கு கொடுக்கப்படும். ஏக்கர் ஒன்றுக்கு உழுவதற்கு ரூ 5 வீதம் வாடகை வசூலிக்கப்படும் இயந்திரக் கலப்பைகளால் உழுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு சர்க்காருக்கு அதிகச் செலவாகும் எனினும் விவசாயத்தை இயந்திர சாதனங்களின் உதவியைக் கொண்டு நடத்தும் முகமாகம் பெருகும் பொருட்டு சர்க்கார் குறைந்த கட்டணத்தை விதிக்க தீர்மானித்திருக்கிறது.

இயந்திரக் கலப்பைகள் கைக்குள் கிடைத்ததும் ஜில்லாக்களின் தேவைக்குக் தகுந்தவாறு விநியோகிக்கப்படும்.

ஆசிரியருக்குக் கடிதம்

தோட்டப் பாடசாலை

ஐயா,

இலங்கையில் அதிக வருமானமாகவது தேயிலையும் ரப்பருமாகும். இவற்றில் அதிகஷ்டப்பட்டுவேலைசெய்யும்தொழிலாளர் இந்தியர்களாகும். அவர்களின் பிள்ளைகள் படிப்பதற்குப் பல சோட்டப் பாடசாலைகள் இருக்கின்றன. அப்பாடசாலைகளில் 70-80 மாணவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியர் 40 ரூபா சம்பளத்துடன கடமை புரிகின்றார்.

அரசினர் பாடசாலையிலோ, அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலையிலோ 70-80 மாணவருக்கு 3-4 ஆசிரியர்களிருந்து கல்வி புகட்டுகின்றனர். அதுமல்லாமல் அரசாட்சியார் அவர்களின் செலவில் அப்பாடசாலைகளில் கல்பயிலும் மாணவர்களுக்கு மத்தியானப் போசனமும் கொடுக்கின்றார்கள்.

ஆனால் இலங்கையின் உயிர்நாடிபோன்ற தோட்டப் பாடசாலைகளிலோ என்றால் 70-80 மாணவர்களுக்கு ஒரே ஆசிரியர் இருந்து தன்னால் இயன்ற அறிவையே புகட்டுகின்றார். அரசாட்சியார்செலவில் ஒரு சிறு போசனமாவது கொடுப்படுவதில்லை. போசனத்திலுமவஞ்சிக்கின்றார்கள். இம்மாணவர்களை "பாடுபட்டவனுக்குப் பூசினிக்காயும சோறும்" என்னும் பழமொழியையே இது உணர்த்துகின்றது. இலங்கையிலுள்ள சங்கவர், இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர், முகம்மதியர் வேடர் முதலாம் பல சாதி மக்களும் அரசாட்சியாரின் பிள்ளைகளாகும். ஒருதாயும் தகப்பனும் தமது 5 பிள்ளைகளுக்கும் வேற்றுமைபாடி வஞ்சித்து நடத்துவார்களா? ஆகவே அரசாங்க சபையின் மதிப்பிற்குரியமந்திரிமார்களும், பிரதிநிதிகளும் இவ்விஷயததைத் தமது கவனத்திற்கு எடுத்து எமது தோட்டப்பாடசாலை பாணவருக்கும ஆசிரியர்களுக்குப்வேண்டிய உதவ புரிந்து எனைய பாடசாலைளுடன் ஒப்பவைக்குமாறு வேண்டுகின்றேன்?

இங்ஙனம்

தமது உதவிநாடும்

கி. முருகசோதிராசன்

பலாக்கொல்லை.

யதுனை, 7-11-47

விவாக ரத்து செய்யப்பட்ட மனைவி

புருஷனைக் கொல்ல முயற்சி

இராமநாதபுரம், நவ 6

தன்னுடன் விவாக ரத்துச் செய்துகொண்ட புருஷனை மீண்டும் மணந்து கொள்ள முடியாமற் போகவே அவரைப் பழய மனைவி கொல்ல முயற்சித்தாளாம்.

இளையாங்குடி ஜனுப் அப்துல் ஹமீத ராவுத்தர் சிக்கந்தரம்மாள் என்ற எதிரியை மணம் செய்து இஸ்லாம் மார்க்கப்படி அந்த விவாகத்தை ரத்து செய்து பிளங்கு போய் வேறு ஸ்திரீயை மணம செய்து வாழ்க்கை நடத்துகையில் அந்த இரண்டாவது மனைவி சாலமாய விடவே விசேஷ சொத்துக்களுடன் அவர் இளையாங்குடி திரும்பிவந்தார். மேற்படி சிக்கந்தரம்மாள் தன்னை மறுபடியும் மணக்க வேண்டுமென்று அபதுல் ஹமீதராவுத்தரை வற்புறுத்தினாளாம் அவர் அதற்கு இணங்காததால் 3-8-47ல இளையாங்குடி சந்தையிலிருந்து அவர் திரும்பும் போது கடற்பாரை கம்பியால் அவரை அவள் அடித்துக் கொல்ல முயற்சித்தாள். இளையாங்குடி போலிஸார் அவள் மீது குற்றம் சாட்டவே அவள் மீதுள்ள வழக்கு முடியும்வரை அவளை ஜாமீனில் விடும்படி பரமக்குடி சப் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். எதிரிக்கு மதுரை அட்வகேட் ஆர் கல்யாண சுந்தரமய்யர் ஆஜரானார். (ராய்ட்டர்)

புதிய எண்ணெய்க் கிணறுகள்

சான்பிரான்ஸிஸகோ, நவ 8

ஆல்பெர்ட்டா சமவெளியில் கால்காரிக்கு தெக்கிழக்கே 150-வது மைல் தூரத்தில குருட் ஆயில் கிணறுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென கலிபோர்னியாவிலுள்ள ஸடாண்டர்ட் ஆயில் கம்பெனியார் தெரிவிக்கிறார்கள். (ராய்ட்டர்)

ஐரோப்பாவுக்கு அதிக உணவு

அமெரிக்காவில் சேகரிப்பு

லோஸ் ஏஞ்சல்ஸ், நவ. 9

ஐரோப்பாவுக்கு அதிக உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு கலிபோர்னியாவிலிந்து-நியூயார்க்வரை உணவுப் பொருள் சேர்ப்பதற்கு அமெரிக்காவுக்கூடாக பிரயாணம் செய்யும் ரயிலில் அனுப்புவதற்கு ஹோலிவூட் நடிகர்கள் 12 கார்களில உணவுப் பொருள்களை ஏற்றி ஊர்வலமாக கொண்டுவந்தனர். இந்த ரயில் உடா வழியாக சிகாகோ வந்து அங்கிருந்து இரண்டு பகுதியாகப் பிரிந்து இம்மாதம் 18-ம் தேதி நியூயாக்கு வந்து சேருமென்றும் கூறப்படுகிறது.

சந்திரனுடன் தொடர்பு!

ஸிட்னி, நவ. 9

சந்திரனிலிருந்து எதிரொலிகள் கேட்பதை ராடார் கருவி மூலம் ஆஸதிரேலிய விஞ்ஞானி ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் இன்று கண்டு பிடித்தனர்

இங்கிருந்து விக்டோரியாவிலுள்ள சிற்றலை ஒலிபரப்பு நிலையத்திற்கு அடையாளங்கள் அனுப்பப்பட்டன அங்கிருந்து அவை 2,40,000 மைல் தூரத்துலுள்ள சந்திரனுக்கு இரண்டரை விநாடிகளுள் விரைந்தனுப்பப்பட்டன.

இங்குள்ள ஒலி வாங்கும் சாதனத்தில சந்திரனிடமிருந்து வந்த எதிரொலியைத் தெளிவாகப் பதிவு செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்த வெற்றி குருட்டடியாக ஏற்பட்டதல்ல என்பதை நிரூபிக்க சோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பனாஸ் பட்டுகளுக்கு சுங்கவரி உயர்வு

இலங்கை சர்க்கார் யோசிக்கிறதாம்

காசி, நவ. 9

பனாரஸ் பட்டு சேலைகளுக்கு சுங்க வரியை 50 சத விகிதம் அதிகமாக உயர்த்துவதென்று இலங்கை சர்க்கார் யோசிப்பதாக இங்கு தெரிய வருகிறது.

இந்த எண்ணத்தை விட்டு விடும்படி பனாரஸ் பட்டு வியாபாரிகள் வர்த்தக சபைத் தலைவர் ஸ்ரீ கே எஸ். சுந்தரம் இலங்கை சர்க்காரை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாகிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாகிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,

பிரதர்ஸ் (மரைக்கார் கடை)

பூக்குளம் பார்க்கிற்கு எதிரே

திருச்சினாப்பள்ளி

"அமிர்த ப்ராஸ்" கருணைக்கிழங்கு லேகியம்.

காட்டுக் கருணைக்கிழங்கும் அநேக உயர்தர மூலிகைகளும் சேர்ந்தது.

மூலமுளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுந்திரம், வாய்வு,

மூல உஷ்ணம் சுகமாகும்

24 நாள் அமிர்த ப்ராஸ் (காலை) ரூ. 4-8-0

" நாக பஸ்பம் (மாலை) " 5-0-0

மூலமுளைக் களிம்பு 1 புட்டி 1-0-0

(கேட்லாக் இனாம்) வி. பி. செலவு ரூபா 1-8-0

தண்டபாணி வைத்தியசாலை,

பெரியகடை வீதி, பழனி. (S India)

கட்டிடத்துக்கு

தேவையான சிமந்தும்

மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்தவிலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி

No-38. மூன்றாங்குறுக்குத் தெரு,

புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029 டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,

யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள்

கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து

இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம்

பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே

எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்

அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி

சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரோச் அன் கோ.,

மலிபான் தெரு,

போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.இ.த.கா.பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம் முற்ற வெளியில் மாபெருங் கூட்டம்

நிகழும் 1947-ம்வருஷம் நவம்பர் மாதம் 15-ந் உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில்

திரு. ஆர். சிவகுருநாதர் கலைமையில் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு வரவேற்புக் கூட்டம் நடைபெறும் யாவரும் கிரளாக அத்தருணம் சமூகமளிக்குமாறு வேண்டப் படுகின்றனர்.

டாக்டர். ச. எம் வி. நாகநாதன்
டாக்டர். வி. பரமநாயகம்
காரியதரிசிகள்.

வயல் விற்பனை

நாவக்குளி இறை கோயிலாக் கண்டியில் சிறந்நெல் வயல் பரப்பு 66. விரும்பியோர்க்கு சிறு பகுதிகளாகவும் கொடுக்கப்படும். விபரம்: 20, அம்மன் ரோட், யாழ்ப்பாணம்.

மலேயாவில் இலங்கைத் துருப்புகள்

சந்தோஷமாக இருக்கின்றனராம்

கொழும்பு, நவ. 10

மலேயாவில் உள்ள இலங்கை துருப்புகள் கஷ்டப்படுவதாக வெளியிடப்பட்ட செய்திகள் உண்மையானவைகளல்லவென்றும் அவர்கள் திருப்திகரமாக சந்தோஷத்துடன் இருப்பதாகவும் சிங்கப்பூரில் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் கூறுகின்றன.

இலங்கையிலிருந்து மலேயாவுக்கு 10,000 இலங்கையரை அனுப்ப ஜூலையில் முயற்சி செய்யப் பட்டது. இப்போது மலேயாவில் சுமார் 4000 இலங்கை ராணுவத்தினர் இருக்கின்றனர்.

மலேயாவில் இலங்கைத் துருப்புகளிடையே சிறிது கலவரம் நடந்ததென்றும் அதனை இடதுசாரிகள் திரித்துக் கூறுவதாகவும் தொடுவாய்ப் பகுதிடைம்ஸ் பத்திரிகை கூறுகின்றது. இலங்கைத் துருப்புகளுக்கு நல்ல உணவுகள் முதலியன அளிக்கப்படுவதாகவும் அவர்களுடைய கஷ்டங்கள் விலக்கப்பட்டுவிட்டன வென்றும் நிலைமை திருந்தி விட்டதாகவும் கூறப்படுகிறது.

தொழிற்சாலை பெண்கள் வேலை நிறுத்தம்

நோர்விச், நவ. 10

நோர்விச் சப்பாத்து தொழிற்சாலையில் வேலை செய்யும் 300 பெண்கள் ஸ்தலத்திலுள்ள ஒரு கடையில் விற்கப்படும் சில பொருள்கள் தங்களுக்குவேண்டுமென்றும் வேலைமுடிந்து அங்கு போகுமுன் அவை விலைப்பட்டு விடலாமென்றும் தமக்கு அப்பொருள்கள் ரிசர்வ் செய்யப்பட்டாலொழிய தாம் வேலை செய்ய முடியாதென்றும் கூறி வேலை செய்ய மறுத்துவிட்டனர். தொழிற்சாலை மானேஜர் 300 ஜோடி ஸடாக்கிங்ஸ்கள் ரிசர்வ் செய்து வைக்குமபடி ஏற்பாடுகள் செய்தபின் அவர்கள் வேலை செய்தனர். வேறு ஒரு தொழிற்சாலையில் இப்பொருள்கள் வாங்குவதற்கு வேலை நேரத்தில் ஒய்வு கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. (ராய்ட்டர்)

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபம்

அத்திவாரக்கல் நாட்டு விழா

மட்டக்களப்பு, நவ. 10

கல்முனையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பாடசாலை வளவினுள் அக்டோபர் 27-ம் தேதி அங்குள்ள டிஸ்டிரிக் நீதிபதி திரு. ஸ்ரீ ஸ்கந்தராஜா காலஞ்சென்ற ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தாவின் ஞாபகார்த்த மண்டபத்தின் முதல் அத்திவாரக் கல்லை நாட்டிவைத்தார். இக் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு ரூ. 5000 வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. வேறும் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

42 பெட்டி தேயிலையை களவெடுத்ததாகவழக்கு

நூரளை, நவ. 10

ஹல்கரானோயாவிலே யுள்ள மகா உவா எஸ்டேட்டிலுள்ள டீ மேக்கர் ரூ. 9,038-40 சதம் மதிப்புள்ள 42 பெட்டி தேயிலையை களவாடியதாக அல்லது நம்பிக்கை மோசம் செய்ததாக குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு நூரளை மாஜிஸ்டிரேட் திரு. டி. கியூ. பெர்னான்டோ முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரியை சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்க வேண்டுமென்று நிதிபதி முடிவு செய்தார்.

போலிஸ் சார்ஜண்டைத் தாக்கியதாக வழக்கு

கொழும்பு, நவ. 10

போலிஸ் பயிற்சி பாடசாலையிலுள்ள சார்ஜண்ட் லடாருள என்பவர் சைக்கிளில் வருகையில் வழி மறித்து அவரை தாக்கி அவரிடமிருந்த ரூ 6-25 பறித்ததாக ஈ. விஜயசேகரா, எம். செல்வரத்தினம், வி எல். அல்பர்ட் ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று கூறியதால் மாஜிஸ்டிரேட் வழக்கு விசாரணையை 19-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

அலார மணி அடிக்கும் கைக்கடிகாரங்கள்

நியூயார்க், நவ. 10

புதிய மாதிரி அலார மணியடிக்கும் கைக் கடிகாரங்கள் இம்முறை கிறிஸ்மசோடு இங்கு விற்கப்படுமென்று அறியப்படுகிறது. இந்த புதுரக கைக் கடிகாரத்துக்கு 'பல்செயின் கிரிகெட்' என்று பெயர். இந்த அலார மணி அடிக்கும் கைக் கடிகாரத்தை முற்றுப்பெறச் செய்வதற்கு 5 வருடஆராய்ச்சி நடந்துள்ளதென்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

மிருகக்காட்சிசாலையில் கவர்னர்

நாக ராஜனைப் பார்வையிட்டார்

கொழும்பு, நவ. 10

மே. த. கவர்னர் தெஹிவளையிலுள்ள மிருகக்காட்சி சாலைக்கு சனிக்கிழமை சென்றிருந்தார். காட்சிசாலை சூப்ரின்டெண்ட் அவருக்கு காட்சிசாலையைச் சுற்றிக் காண்பித்தார். சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நாகராஜனை பார்வையிட்டார். இப்பாம்பு சமீபத்தில் தான் காட்சிசாலைக்கு கொண்டுவரப்பட்டது.

மணிபுரி சத்யாக்ரஹிகள் மீது போலிசார் சுட்டனர்

20 பேர்கள் காயம்

உடனே தலையிடும்படி சர்தார் படேலுக்கு சர்வாதிகாரி தந்தி

கௌஹத்தி, நவ. 9

இம்பாலில் மணிபுரி சத்யாக்ரஹிகள் மீது போலிசார் 60 ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் இதில் 20 பேர் காயமடைந்தனரென்றும் சமஸ்தானக் காங்கிரஸ் பிரசார அதிகாரியிடமிருந்து இங்கு கிடைத்துள்ள செய்தி கூறுகிறது.

இடைக்கால கவுன்ஸிலை கலைத்து விட வேண்டுமென்றும் அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்த வேண்டுமென்றும் 1948 ஏப்ரல் 1-ம் தேதிக்குள் பொறுப்பாட்சி தரவேண்டுமென்று சமஸ்தான காங்கிரஸ் கோரியது. திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்காமல் போகவே நவம்பர் 6-ம் தேதி சமஸ்தானக் காங்கிரஸ் சத்யாக்ரஹத்தை ஆரம்பித்து விட்டது.

சமஸ்தான காங்கிரஸின் சர்வாதிகாரி சர்தார் படேல் ஷேக் அப்துல்லா, அஸாப் கவர்னர் இவர்களை உடனே தலையிடும்படி கோரி தந்தியடித்திருக்கிறார்.

விறகு விலையைக் குறைக்க முயற்சி

கொழும்பு, நவ. 10

இப்பொழுது நகரில் விறகின் விலை அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். சில இடங்களில் விறகு அந்தர் ரூ 2 ஆகவும் விற்கப்படுகிறது. இந்த விலை யேற்றத்தைத் தடுக்க தனிப்பட்டவர்களும் அரசாங்கமும் ஒத்துழைக்கக்கூடிய முறையைக் கொண்டுவருவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வரப்படுகிறது.

தனிப்பட்ட வர்த்தகர்கள் நிதி மந்திரி, போக்குவரத்து மந்திரி, சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி ஆகிய மூவருக்கும் அனுப்பிய மகஜரில் விறகு விநியோகத்துக்கு பெட்ரோல் அதிகம் அளிக்கப்பட வேண்டுமென்றும் மற்றும் சர்க்கார் உதவிகளும் அளிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. சபை பண நிலைமை

சில விபரங்கள்

லேக்ஸக்ஸஸ், நவ. 9

ஐ. நா. சபை மூலதனம் 2 கோடி டாலரில் 99 96 வீதம் செலுத்தப்பட்டு விட்டது. 1946-ம் வருஷ செலவுத் தொகையில் 99 36 வீதம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் இவ்வருஷம் அக்டோபர் வரையுள்ள செலவுத் தொகையில் 89 69. வீதமும் செலுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இவ்வருஷ அக்டோபர் வரையுள்ள செலவுத் தொகை 2 கோடி எழுபத்துநாலரை லட்சடாலராகும்.

அடுத்த வருஷ செலவினங்களில் மிகப் பெரியதான 74 லட்சம் டாலர் மகாநாட்டுச் செலவுகள் வரவு செலவுத் திட்டக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. (ராய்ட்டர்)

பெற்றோர் ஆசிரியர் சங்கம்

முசலி, நவ. 6

முசலி அரசினர் பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் சென்ற புதன்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் அவ்வூரி கிராமச் சங்கத் தலைவர் ஜனாப். பக்கீர் முகம்மது தலைமையிற் கூடியது. சங்கக் கௌரவ காரியதரிசி மௌலவி எஸ்.எவ். மவுலானா அரபிக் ஆசிரியர் பெற்றோர்-ஆசிரியர்சங்கம்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. மேற்படி சங்கத்தின் புது வருடத்துக்கும் மேற்படி தலைவரையே ஏகமனதாகத் தெரியப்பட்டது. மற்றும் சங்க உறுப்பாளரையும், புதிய நிதியுறு பெற்றோர் பிரதிநிதிகளும் தெரியப்பட்டனர். பாடசாலைத்தலைமை ஆசிரியரும் சங்கத் தலைவராலும்நன்றி கூறப்பட்டு தேநீர் விருந்துடன் சங்கம் கலைந்தது.

ராஜ கோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரலானார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளம் உத்தியோக காலம் முதலியவைபற்றிய நிபந்தனைகளை தங்களிடம் சமர்ப்பிக்கும்படி பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவையும் பாகிஸ்தானையும் கேட்டிருந்தார்கள். இந்த ஒப்பந்த நிபந்தனைகளைப் பிரசுரம்செய்து அதன் பிறகு இஷ்டமான பிரிட்டிஷ் ராணுவத்தினர் புதிதாக இந்தியாவிலோ பாகிஸ்தானில் அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவித்திருந்தார்கள். அதன்படி பாகிஸ்தான் சர்க்கார் தங்கள் நிபந்தனைகளை அக்டோபர் 20-ம் தேதியே பிரிட்டிஷ் சர்க்காரிடம் சமர்ப்பித்தார்கள். அக்டோபர் 21-ம் தேதியன்று பிரிட்டிஷ் சர்க்கார் அந்த நிபந்தனைகளில் சில திருத்தங்கள் செய்து அவைகளை பாகிஸ்தான் சம்மதத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர். பாகிஸ்தான் சர்க்கார் அந்த திருத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கி நவம்பர் 5-ம் தேதியன்று ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டனர். ஆகவே 1948 ஜனுவரி முதல் தேதி முதல் பிரிட்டிஷாரை ராணுவதத்தில் வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாக பாகிஸ்தானுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நவம்பர் 10-ம் தேதி திங்கட்கிழமையாகிய இன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோன்று இந்திய சர்க்காருடனும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ் ராணுவ சேவா ஒப்பந்தப் பேச்சு நடத்தி வருகிறார்கள். பாகிஸ்தானைப் போல நவம்பர் 5-ம் தேதிக்குள் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏற்படவில்லையாதலால் இரண்டு ஒப்பந்தங்களையும் ஏககாலத்தில் பிரசுரிக்க முடியவில்லை. இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏற்பட்டதும் அது பிரசுரிக்கப்படும். அநேகமாக கடற்படைகளுக்குத்தான் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அதிகமாக பிரிட்டிஷார் தேவைப்படும்.

இன்று பிரிட்டிஷ் சர்க்கார் சாம்ராஜ்ய உறவு மந்திரி காரிபாலயத்தார் மேற்குறிப்பிட்ட அறிக்கையை பிரசுரித்திருக்கிறார்கள்.

ஒப்பந்தம்

பிரிட்டனுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட பிரிட்டிஷ் ராணுவ சேவா ஒப்பந்தம் ஐயாயிரம வார்த்தைகளையுடையது. அதன் சாராம்சம் பின்வருமாறு:-

1 அந்தஸ்து—1948 ஜனவரி முதல் தேதி முதல் பாக்கிஸ்தான் ராணுவத்தில் சேரும் பிரிட்டிஷ் ராணுவத்தினர் பிரிட்டிஷ் ராணுவ சேவா அந்தஸ்துடையவர்களாகவும் பிரிட்டிஷ் ராணுவக் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்ற சட்டத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாகவுமே இருப்பார்கள். கிங்ஸ் கமிஷன் முதல் எல்லா பதவிகளும் முன்புள்ளவை போலவே இருக்கும்.

2 உத்தியோக காலம்—பாக்கிஸ்தான் ராணுவத்தில் சேவை செய்ய இஷ்டப்படும் பிரிட்டிஷ் ராணுவத்தினர் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று வருட காலத்திற்கு சேவை செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டு சேர வேண்டும். உத்தியோகமேற்று ஒரு வருடத்திற்குப் பின் இருதரப்பிலும் 6 மாத முன்னறிவிப்பு செய்து உத்தியோகத்திலிருந்து விலகிக் கொள்ளவோ விலக்கப்படவோ உரிமையுண்டு. பிரிட்டிஷ் சர்க்கார் நினைத்தால் இஷ்டப்பட்ட எந்த சமயத்திலும் பாக்கிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தினரை பிரிட்டனுக்கு திரும்ப அழைத்துக்கொள்ளலாம்.

3 பண விஷயம்— உலகில் எந்தப் பகுதியிலுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கு அளிக்கப்படும் சம்பளமே பாக்கிஸ்தான் ராணுவத்தில் சேரும் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கும் அளிக்கப்படும். அதோடு தினம் 3 ஷில்லிங முதல் 25 ஷில்லிங வரை விசேஷ சம்பளம் அளிக்கப்படும். சுதேச பாஷை தெரிந்த பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கு தினம் 2 ஷில்லிங் அதிக சம்பளம் கொடுக்கப்படும். பென்ஷன், வீடு முதலான சம்பந்தமான ஏற்பாடுகளும் தக்கபடி செய்யப்பட்டிருக்கின்றன. [ராய்ட்டர்]

கிங்ஸ்லியில் தீபாவளி விருந்து!

இன்று துவக்கம் தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணிக்கும்
தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு இன்று பகல் காட்சி 2-30 மணிக்கும்

கண்ணுக்கினிய ஜோடிகள்!
அபூர்வ நடனங்கள், பாடல்கள் நிறைந்த
தீபாவளி திரை விருந்து!

கன்னிகா

என்னும் உயரிய தமிழ்ப் பேசும் படம்
உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என் எஸ். கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி. ச. வரதன், எம்.எஸ சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் நிறம்பட நடித்தது.

பதிப்புரிமைச் சட்டத்தை மீறியதாக வழக்கு

சமரஸமாக முடிவு செய்யப்பட்டது

கொழும்பு, நவ. 10

கொழும்பு மருதானை முதல் டிவிஷனைச் சேர்ந்த 321-ம் இலக்கத்தில் உள்ள திரு. ஜி. ஆர். செனிவிரத்தினா என்பவர் மீது புத்தக பதிப்புரிமைச் சட்டத்தை மீறி தமது ஆங்கில—சிங்கள அகராதியை அச்சடித்து வெளியிட்டதாக குற்றப் சாட்டி அதற் ரூ 10,000 நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கொழும்பு டாம் வீதி 313-ம் இலக்கத்தைச் சேர்ந்த திரு ஜே ஈ பி மல்தெனியா என்பவரால் கொண்டு வரப்பட்ட வழக்கு சமரஸமாகத் தீர்க்கப்பட்டு வழக்கு செலவுகளில்லாது தள்ளுபடி செய்யப்பட்டது.

சயாமில் திடீர் ராணுவப் புரட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யோகம் செய்யப்பட்டது அந்த சமயம் தப்பியோடிய அவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சிங்கப்பூருக்கு செய்தி தாமதம்

சிங்கப்பூர், நவ. 9

பாங்காங்கில் செய்திகளணிக்கை செய்யப்படுகின்றன. தணிக்கை யதிகாரிகளிடம் இன்று காலை ராய்ட்டர் காரியாலயம் சமர்ப்பித்த செய்திகள் மாலைவரை சிங்கப்பூருக்கு வந்து சேரவில்லை. அதற்கு முன் அனுப்பிய செய்திகள் அதிக தாமதப்பட்டுக் கிடைத்தன. இத் தாமதத்திற்குக் காரணம் தெரியவில்லை.

சயாம் பரிசு

பாங்காக், நவ. 9

சயாம் சர்க்கார் எலிசபெத் இளவரசி கலியாணத்திற்கு ஒரு தங்க "டாய்லெட் செட்" டை பரிசாக அனுப்பினர். வியாழக்கிழமையன்று இங்கிருந்து புறப்பட்ட பி. ஓ. ஏ. சி விமானத்தில் அது அனுப்பப்பட்டது. ஜப்பானிலுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்ய படைகளின் பிரதம தளபதி அனுப்பிய பரிசும் அவ்விமானத்தில் செல்கிறது. (ராய்ட்டர்)

புதிய அரசியல்

பாங்காக், நவ 10

இன்று சயாம் ராஜப் பிரதிநிதி சபை 98 பிரிவுகளையுடைய புதிய அரசியல் திட்டத்தில் கைச்சாத்திட்டது. ராஜப்பிரதிநிதி சபைக்குப் பதில் 5 பேர் அடங்கிய ஓர் ஆலோசனை சபை நிறுவப்படுகிறது. இந்த ஆலோசனைசபை 19 வயதுள்ள சயாம் மன்னர் ஸ்ரீ மிபோன் அதுலத் துக்கு ஆலோசனை கூறும். வேறுவிதமான மாறுதல் எதுவுமில்லை.

நேற்று ஓர் நந்தவன விருந்தில் ராணுவத்தினர் பிரதம மந்திரியையும், மந்திரிகளையும் கைதுசெய்யச் சென்றபோது சிறிது போராட்டம் நடைபெற்றது. அந்த சமயத்தில் பிரதம மந்திரியும் பனம்யாங்கும் தப்பியோடிவிட்டனர். அவர்கள் கப்பலேறி விட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. இப்பொழுது சிங்கப்பூருடன் செய்திப் போக்குவரத்து ஒழுங்காக நடைபெறுகிறது. (ராய்ட்டர்)

5000 கொத்தரிசியுடன் கைப்பற்றப்பட்ட லொறி

போலிஸாரின் 35 மைல் பிரயாணம்

நீர்கொழும்பு, நவ. 10

சிலாபம் போலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் பீட்டரும் கான்ஸ்டபிள் பெரேராவும் மாரலலா கிராம விதானையும் வேறும் பலரும் மாரலலா சந்தியில் மறைந்திருந்தனர் இப்பகுதியில் வடிகட்டிய சாராயம் சிலாபத்துக்கு கொண்டுவரப்படுவதாக அறிந்தே இவர்கள் ஒளிந்திருந்தனர். ஒரு கடடை வண்டியில் கொண்டுவரப்பட்ட வடிகட்டிய சாராயம் கண்டுபிடிக்கப்பட்டு போலிஸாருடன் போலிஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டது. மேலும் வருமென்னும் எண்ணத்துடன் சப்-இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள் பெரேராவும் விதானையும் மறைந்திருந்தனர்.

சிலாபப் பகுதியில் இருந்து ஒரு லொறி வெகு வேகமாக வருவது கண்டு. கான்ஸ்டபிள் பெரேராவும் விதானையும் வீதியில் நின்று அந்த லொறியை நிறுத்தும்படி கூறினர். ஆனால் லொறி மிக வேகமாக வந்ததால அவர்கள் வீதியை விட்டு விலகவேண்டி நேரிட்டது, பின்னர் கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர் விதானை மூவரும் காரில் லொறியைத் துரத்திச் சென்றனர். சுமார் 35 மைல் தூரத்துக்கு மேல் இவர்கள் லொறியைத் துரத்திச் சென்றனர். கடைசியில் லொறியின் டயர் ஒன்று நீர்கொழும்புக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திம்பிரிகடுவா என்னுமிடத்தில் வெடித்ததால் நின்றுவிட்டது. போலிஸாரைக் கண்டதும் லொறியில் இருந்தவர்கள் ஓடினர். நால்வர் கைது செய்யப்பட்டனர். நீர்கொழும்பு போலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் உதவியுடன் லொறியில் இருந்த அரிசியுடன் லொறியை ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர். லொறியில 5000 கொத்து நாட்டரிசி இருந்தது,

லொறியுடன் அரிசியும் எதிரிகள் நால்வரும் இன்று சிலாபம் மாஜிஸ்டிரேட்முன் ஆஜர் செய்யப்படுவர்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள்

தகுந்த சம்பளம் கொடுக்க வேண்டும்

நாவலப்பிட்டி, நவ 8

சென்ற சனிக்கிழமை கூடிய நாவலப்பிட்டி தமிழாசிரியர் சங்க நிர்வாக சபையில் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களைப் பற்றி பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1-தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அவரவர் தகுதிகேற்ற சம்பளமும் பதிவும் கொடுக்கப்படவேண்டும்.

2-இப்போது தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்கள் எல்லோருக்கும் சேவை நிபந்தனையின்றி தொடர்ந்தே உத்தியோகம் கொடுக்கப்படவேண்டும்.

3-உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளிலோ அல்லது அரசினர் பாடசாலைகளிலோ சில பாடசாலைகள் சிங்கள தமிழ்பாடசாலைகளாகவும்தமிழ் சிங்களபாடசாலைகளாகவும்உள்ளன. அவற்றுள் எவைகேனும் ஒன்று பிரிந்துபோக விரும்பினால பிரிந்து போதற்கேற்ற உரிமை இருக்கவேண்டுமென்று இச் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

இரகசிய போலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்தாராம்

எதிரிக்கு ரிமாண்டு

கம்பஹா, நவ. 10

கிராண்ட்பாஸைச் சேர்ந்த டபிள்யூ. பீட்டர் பெர்னாண்டோ என்பவர் இரகசியப் போலிஸ இன்ஸபெக்டர் போல வேஷம் போட்டுக்கொண்டு கடவதை போலிஸ பகுதியில் கிரிமெடியகாரா என்னுமிடத்தில் நடந்த கொலை சம்பந்தமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு எதிரியின் வீட்டுக்குச் சென்று விசாரனை நடத்தினர் என்றும் அவ் வீட்டாரிடமிருந்து ரூ 250 கேட்டாரென்றும், பின் அவ்வீட்டு வராந்தையில் படுத்து நித்திரை செய்ய முயற்சித்தாரென்றும் இதனால் சந்தேகமடைந்த வீட்டுக்காரர் போலிஸாருக்கு தகவல் கொடுத்ததும் போலிஸ இன்ஸபெக்டர் கிளமெண்ட் அல்லெஸ நபரைக் கைது செய்தாரென்றும் கூறப்படுகிறது. எதிரியை மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்த இன்ஸ்பெக்டர் மேற்கொண்டு புலன் விசாரனை முடியும் வரை எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி கேட்டுக் கொண்டார். நீதிபதியும் எதிரியை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

முஸ்லிம் பிரதிநிதிகள், செனட்டர்

கல்முனையில் வரவேற்பு

கல்முனை, நவ 6

கல்முனைக்குடி தென்பகுதி வாசிகளாகிய சோனகர்களால் செனட்டர் ஆலி ஜனுப் ஏ. ஆர். ஏ ராசிக் கல்லூரி அதிபரியும் உள் நாட்டு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி இராஜவாசல் முதலியார் ஆலி ஜனுப் எம். எஸ், காரியப்பர், மூதூர்ப் பிரதிநிதி ஆலி ஜனுப் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் ஆகிய மூவருக்கும் கல்முனை ஐக்கியம் குறிச்சியில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு பந்தலில் வரவேற்பு நடத்தப்பட்டது.

தலைவர்கள் ஊர்வலமாகப் பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கூட்டத்திற்கு சபையார் இராஜவாசல் முதலியாரைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

ஆலி ஜனுப் மௌல்வி முகம்மது இஸ்மாயில் ஆலிம் சாஹிப் அவர்கள் திரு அத்து ஓதினர்.

தலைவர் முதலியார் எம். எஸ். காரியப்பர் நாட்டின்கல்வியைப் பற்றியும் தேச முன்னேற்றத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்.

ஜனுப் அபூபக்கர் சோனகர் முன்னேற்றத்தைப்பற்றியும் இலங்கைச் சோனகர் யாவர் என்பதையும் சோனகரின் ஒற்றுமையின் அக்கியாவசியத்தையும் தமது பேச்சில் கூறினர்.

அகில இலங்கை சோனக சங்கக் காரியதரிசி ஜனுப் காலிது சோனகர் கல்வி, அரசியல், பொருளாதாரம் முதலியவற்றில் முன்னேற்றமடைவதற்கு கட்டுப்பாடான ஒற்றுமையும் வேண்டுமெனப் பேசினர்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 11உ இந்த பத்திரிகை 194A. நட்டாரத்தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

ஜிந்தும்பிட்டி தியேட்டரில்
இப்பொழுது
தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி
தண்டபாணிதேசிகர் - சாமா
மற்றும் பலர் நடிக்கும்
ஜெமினி நந்தனார்
என்னும் சிறந்த தமிழ் பேசும் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org